RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt24110

OPEN ACCESS

# மேலாண்மை பொன்னுசாமி பார்வையில் கைம்பெண்களின் நிலை

இரா. சதாசிவம் [அ], கோ. இராஜாங்கம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர் 608002, தமிழ்நாடு, இந்தியா.

# Ponnusamy's view on Widowhood

R. Sathasivam [a], G. Rajangam [a, *]

[a] Department of Tamil, Annamalai University, Annamalai Nagar-608002, Tamil Nadu, India

* Corresponding Author: grajangam1992@gmail.com

Received: 13-10-2023
Revised: 20-12-2023
Accepted: 12-01-2024
Published: 20-01-2024

Check for updates

## ABSTRACT

In early days fortune-telling was a ritual. If a cat comes across, if someone sneezes and if a person slams on the door when he goes out it is considered as a bad vibe. To an extent if a widower comes across they will come back inside the house and drink water and leave out after some time. On the other hand, widows have a lot of restrictions. Women who have lost their husbands should not keep bindhi and not allowed to participate in ceremonies and festivals. Women and men who believed in social justice fought against all such activities. Widowhood is one of the most important problem in the society. In general, the status of widower in society is inferior, viewed as second-class citizens, and insecure. Today there is no legal restriction for widow to remarry. So after losing her husband, she devotes her life to her children. This article is about Ponnusamy's view on widowhood.

**Keywords:** Women, social justice, Widowhood, Sangam Ponnusamy

## முன்னுரை

சமூகத்தில் நிலவும் பெண்கள் பிரச்சனைகளில் மிகவும் முக்கியமானது கைம்பெண் பிரச்சனை முக்கியமாக உள்ளது. பொதுவாகவே சமூகத்தில் கைம்பெண்களின் நிலை சற்றுத் தாழ்வானதாகவும் இரண்டாம் தரக் குடிமக்களாக நோக்கத்தக்கதாகவும், பாதுகாப்பற்றதாகவுமே இருந்து வருகிறது. கைம்பெண்கள் மறுமணம் செய்து கொண்டு தக்கத்துணையோடு வாழ்வதில் இன்று சட்டப்பூர்வத் தடை ஏதும் இல்லை. எனவே கணவனை இழந்த பிறகு பிள்ளைகளுக்காக தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றார்கள். இக்கட்டுரையில் மேலாண்மை பொன்னுசாமி சிறுகதைகளில் காணலாம்.

## கைம்பெண்களுக்கு நிலவும் பிரச்சனை

ஒருகாலத்தில் சகுணம் பார்த்தல் என்பதே ஒரு சடங்காக நடக்கும். பூனை குறுக்கே வந்தால், யாராவது தும்மினால், வாசல் கதவில் இடித்துக்கொண்டால், கல் தடுக்கினால் என்று பட்டியல் நீளும். கணவனை இழந்த பெண் எதிரே வந்துவிட்டால் அவ்வளவுதான். அந்தப் பெண்ணை, எந்த வயதுடையவராக இருந்தாலும் கரித்துக்கொட்டுவார்கள். அவரைப் பார்த்த தோஷம் விடுபட மீண்டும் வீட்டுக்குள் வந்து உட்கார்ந்து தண்ணீர் குடித்துவிட்டுச் சிறிது நேரம் கழித்துத் தான் கிளம்புவார்கள்.

இன்னொரு பக்கம் அவர்களுக்கு ஏராளமான கட்டுப்பாடுகள் உண்டு. கணவனை இழந்த பெண்கள் பொட்டு வைக்கக்கூடாது, மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூடாது என்பது போன்ற

தனிமனித உரிமைகளுக்கு எதிரான செயல்பாடுகளை எதிர்த்துச் சமூக நீதியில் நம்பிக்கைகொண்ட பெண்களும் ஆண்களும் போராடினர். இதனை,

“பெண்கள் கைம்மை எய்தினால்? ஆண்மகன் அந்நிலை எய்துவதில்லயோ? பெண்மகள் கைம்மை எய்தியதும் அவள்பாலுள்ள இயற்கை ஓடிவிடுகிறதோ? உயிர் போய் விடுகிறதோ? கடவுள் மறைந்து விடுகிறாரோ? படைப்பில் என்ன குறைவு ஏற்படுகிறது? அவள் எதிரில் வரக் கூடாதாம்! கூட்டங்களில் போகக் கூடாதாம்! நல்வினைகளில் தலைகாட்டக்கூடாதாம்! அப்பெண் மூதேவியாய் விட்டாளாம்! கைம்மை எய்திய ஆண்மகனோ எல்லாவற்றினுங் கலந்து கொள்ளலாம்! அவன் பல்லிழந்து முதியனாயினும் பதினாறு வயது கட்டழகியை மணஞ் செய்யலாம்! என்ன வேற்றுமை? இவ்வேற்றுமை இயற்கையில் உள்ளதா? கடவுள் கண்டதா! இஃது இரக்கமில்லா வன்கணாளர் இடைக்காலத்தில் விதித்த கொடுமை! கொடுமை!”1 என திரு.வி.க. பரைசாட்டுகிறார் (Kalyana Sundaram, 1934).

## குழந்தைகளை வளர்ப்பதில் கைம்பெண்களில் பாடு

குழந்தைகளை பார்ப்பதில் பெண்களின் பங்கு அதிகமாக இருக்கிறது. பெண்களின் பங்கில் குழந்தைகள் சரியான முறையில் வளர்ப்பதிலும் அவர்களுக்கு தேவை வேண்டிய எல்லாவற்றையும் சரிசெய்து ஒழுக்கத்தோடும், சமூகத்தில் அங்கமாக இருக்கின்ற அளவிற்க பிள்ளைகளை வளர்க்கின்றனர். எனவே தாயை இழந்த குழந்தைகள் தறுதலையாக இருக்கின்றனர். அதுவே, தந்தையை இழந்த தாய் மட்டும் இருந்து அந்த குழந்தை சரியான முறையில் இருக்கின்றார் என்றால் குழந்தைகளை கல்வி நிலையிலும் வளர்ச்சி பெற்றவர்களாக காட்சியளிக்கின்றார்கள்.

கணவனை இழந்த பெண்கள் குழந்தைகளை வளர்பதில் அதிகமான இன்னல்களில் இருக்கின்றார்கள். வசதிவாய்ப்புள்ள குடும்பத்தில் குழந்தைகளை வளர்ப்பதில் எந்தயொரு சிரமும் கிடையாது. ஆனால் எந்தயொரு வசதி இல்லாத கணவனை இழந்த பெண்களில் பாடுகள் அரும்பாடுகளாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் தினம்தினம் அன்றாட பொழப்புக்க அந்தபெண் அன்றாட கூலி வேலை செய்த பணம் ஒரு நாள் உணவுக்கு சரியாகி விடுகிறது. அதன்பின் அந்த குழந்தைகளுக்கு கல்விக்கு தேவை வேண்டிய புத்தகம், பேணா, துணி போன்ற அத்திவாசிய பொருள்கள் வாங்குவதற்கு பெரும் பாடுகளை பார்க்கலாம். இதனை,

“ஓடியாடி ஓழைச்சு சம்பாதிச்சப்போட வேண்டிய மனுசன், இந்த மணிக்கொத்துப் புள்ளைகளைமறந்துட்டுடான்பொட்டைச் சிறுக்கிநா பொழப்புக்காக இப்படி நாயா அலைஞ்சு... காட்லே சீரழிய வேண்டியிருக்கு...

தன்னையும் குழந்தைகளையும் தவிக்க விட்டு விட்டு ஓடிப்போன புருஷனை நினைக்கிற கணத்தில் சண்டாளமாக வெஎம் பொங்கினாலும், அந்த கோபம் மறு நிமிஷமே இழப்பின் சோகமாகக் கனிந்து மனசை அழுத்துகிறது.

நெஞ்சுக்குள் மோதித் தழும்புகிற வேதனை, கண்களின் ஓரங்களில் நீராகக் கசிகிறது”

கணவனை இழந்த பெண்கள் வாழ்க்கையில் நல்ல நிலையில் அடைய வேண்டும் என்றும் அன்றாட கூலி வேலைகளை செய்து குடும்பத்தை மேம்படுத்த ஒத்த பெண்ணாக இருந்து வேலையில் கஷ்டப்படுகின்றதை ‘ஜீவிதத்தின் உள் வட்டம்’ என்ற சிறுகதையின் மூலம் மேலாண்மை பொன்னுசாமி காட்டியுள்ளார் (Melaanmai Ponnusami, 2002).

“ஒரு பொழுதின் வயிற்றுப்பாடு கழிய... இந்த நாயப் படாதபாடு படவேண்டியிருக்கு. இந்த அவலத்துல உசுர் வைச்சிக்கிட்டு இருக்கிறதைவிட மாண்டு மடிஞ் போகலாம்... சே!

காளிமுத்து, கடையை விட்டு வெளியே வந்த செல்லம்மா, சாமான்கள் வாங்கியது போக மிச்ச மிருந்த சில்லறைய எண்ணிப் பார்த்தாள். ஒரு ரூபாய்க்குகூட எட்டவில்லை. முந்தியில் அதை முடிந்து கொண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டாள்”

கைம்பெண்கள் மட்டுமல்ல அன்றாட கூலிக்கு செல்கின்ற பெண்களின் நிலைமையும் இப்படித்தான் கஷ்டப்படுகின்றார்கள் (Melaanmai Ponnusami, 2002).

கணவனை இழந்து பிள்ளைகளை வளர்ப்பதில் பெண்களுக்கு அதிகபடியான கஷ்டங்களை பார்க்கின்றார்கள். அதுவும் கைம்பெண் என்றவுடன் உதவி செய்கின்ற மாதிரி சொல்லி உள்ளாசத்துக்கு அழைக்கின்ற ஆண்களின் மத்தியில், தன்னுடைய கற்புதான் முக்கியம், மாணம்தான் முக்கியம் என்று இருக்கின்ற பெண்கள் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களை பார்ப்போம்.

“கருத்துக்கு மேல் ஓநாய்த்தலை இருப்பதாகவே இவள் மனசுக்குப் படும். ஓநாயின் நாவில் எச்சில் வழியும்.

கசந்த மனசின் கைப்பைக் காட்டிக் கொள்ளாமல் வெறுமனே பார்த்தாள்.

“என்ன மாமா?”

“வைத்தியம் பண்ண வழிதெரியாம, வளரவேண்டிய புள்ளைய வெச்சுக் கிட்டிருக்கியா்லே” உரிமையும் கண்டிப்புமாக அதட்டினார்.

“ஏன் இப்படிப் பேசுதே! சொந்த பந்தம்னு நாங்க இருக்குறது நெனைப்பு இல்லியா? நாங்க ஒதவமாட்டோமா? ஒனக்கு இப்ப எம்புட்டு வேறும்? ஐயாயிரம் தானே? நாளையே வாங்கிக்க...

“எதை நம்பித் தாரீக மாமா? நகை நட்டு எதுவும் ஏங்கிட்ட இல்லியே அடகு வைக்க...”

“ஒன்னை நம்பித்தான்...”

“என்னையா...”

புரியாமையுடன் கண்கள் சுருக்கினாள் விஜயம். நெற்றியின் சுருக்கத்தில் கேள்வி ஒலித்தது. அவர் சிரிப்புக்குள் இருளின் முகம்.

“நீ தொணையில்லாத பொண்ணு. ஏற்கெனவே குடும்பக் கட்டுப்பாடு செஞ்சுக்கிட்டிருக்கே... கையும் கையும் பொத்துனாப்புலே நாம கமுக்கமா இருந்துக்கலாம். எந்தப் பயமுமில்லாம நாம அப்பப்ப பாத்துக்கிடலாம்.

“போ.. நாயே... வெளியே!...

“புள்ளைய நெனைச்சுப்பாரு... யாருக்கும் தெரியாம நாம பழகிக்கலாம்...”

“ச்சீ! தெரியாம செய்ற அசிங்கம், அசிங்கமில்லியா? ஒழுக்கம்கிறது ஊருக்கப் பயந்து காப்பாத்துறதுல்லே... உள்ளேயிருந்து கொழுந்து விட்டெரியுற பண்புதீ! ச்சேய்... நாயே... அதெல்லாம் ஒனக்கு என்ன தெரியப்போகுது! போயிரு வெளியே... விளக்கமாத்தை எடுக்குறதுக்குள்ளே...”

இப்படியெல்லாம் பெண்கள் வாழ்கின்றார்கள் என்பதை மேலாண்மை பொன்னசாமி ‘பூ நெஞ்சத் தீ’ சிறுகதைகளில் காட்டியுள்ளார் மற்றும் இன்னொரு சிறுகதையில் பிள்ளைகளுக்கு பொங்கல் திருநாளில் புதுத்துணிகளை வாங்கித்தர காசுயில்லாமல் திண்டாடும் பெண்ணை பார்க்கலாம். எனவே பிள்ளைகளுக்கு புத்தாடைகளை வாங்குவதற்கு காசுயில்லாமல் மற்றவரிடம் கேட்டாலும் என்ன நினைப்பார்களோ என்ற நினைப்பில் வைராக்கியத்தோடு வாழ்கின்ற பெண்ணை ‘முக்காலும் காலுமாய்’ என்ற கதையிலும், ‘மானத்தீ’, ‘வம்ச வைரம்’ என்ற சிறுகதைகளிலும் வைராக்கிய பெண்களை காணலாம் (Melaanmai Ponnusami, 2004).

“இளமை மணம், விதவைநிலைக் கொடுமைகள், சாதிக் கட்டுமானங்கள், சாத்திர சம்பிரதாய அடிப்படையிலான ஒடுக்குமுறைகள் முதலியவற்றிலிருந்து விடுபட்டுப் பெண், கல்வி பெற வேண்டுமென்றும், திருமணத்தில் அவளது தனிக்கருத்தும், உரிமையும் மதிக்கப்பட வேண்டுமென்றும், குடும்பத்தளத்திலும், பிற சமூகத் தளங்களிலும் அவளுக்கு சமத்துவம் வேண்டுமென்றும் இருவருமே வற்புறுத்தியிருக்கின்றனர்”

பெண்களுக்கு தனிப்பட்ட உரிமை தர வேண்டும் மற்றும் முற்காலத்தில் எப்படியோ ஆனால் இப்போ பெண்களுக்கான நிறைய திட்டத்தில் அரசாங்கம் கொண்டுவரப்பட்டது. இதில் அதிகப்படியான பெண்கள் கல்விலோ, வேலை வாய்ப்பிலோ என அதிகமாக பயன்பெறுகின்றனர். இதனை கவனித்து யோசித்து பெண்கள் செயல்படவேண்டும்.

## மறுமணம்

கணவனால் கைவிப்பட்ட பெண்களுக்கு விதவை என்ற பட்டம் இருந்து கொண்டே இருக்கிறது. எனவே இவையெல்லாம் உடைந்து எறியவேண்டும் என்றால் விதவை பெண்களுக்கு மறுவாழ்வு கொடுக்க முன்வர வேண்டும் என்பதை காணலாம்.

“உற்ற வயதடைந்து, பல ஆண்டு தலைவனுடன் கூடிக் குலாவிப் பிள்ளைப்பேறு பெற்ற ஒருத்தி, கைம்பெண் ஆவளேல், அவள் மறுமணஞ் செய்யாமலிருக்கலாம். ஆனால் அவர்கட்கும் தன் விருப்பப்படி நடக்கும் உரிமை இருத்தல் வேண்டும். அவள் விரும்பினால் மறு மணஞ் செய்து கொள்ளலாம். அவள் விபசாரம் செய்து கெட்டு அழிவதினும், ஒருவனை மணந்து அவனுடன் வாழ்தல் சிறப்பாகும். மணம் விரும்புங் கைம்பெண்ணைத் தடுத்தலுங் கூடாதுf விடும்பாதவளை வலியுறுத்தலுங் கூடாது பொறுப்புப் பெண்ணினுடையதா இருத்தல் வேண்டும்” மறுவாழ்வு பற்றி சிந்தனையில் திரு.வி.க. கூறியுள்ளார்.

“என்னடா... இதான் பொண்ணா?

“ஆமா”

“படுபாவி... ஏமாந்துட்டீயேடா... நல்ல விசாரிக்கலியா?

“ஏண்டா”

“இவளை பத்தித் தெரியுமா?

“தெரியம்”

“என்ன தெரியம் உனக்கு?

“இவளுக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆனது, ஒரு மாசம் அவனோடு வாழ்ந்துட்டுப் பிடிக்காம வீடுவந்தது, அப்புறம் அவன் மருந்தைக் குடீச்சு செத்தது, இவள் ஒரு விதவைங்குறது எல்லாமே தெரியும்”

“தெரிஞ்சுமா செஞ்சே? அறுத்துக் கட்டிக்கிற ஜாதியுமில்லியேடா நீ. ஏஞ்சாதிக்காரங்க ஒன்றை ரொம்ப இழிவாய்ப் பேசுவாங்களே...”

“இதை இழிவா நினைக்குறவன் மனுசனேயில்லை. கேவலமான மனுசப் பிறவிகளைப் பொருட்படுத்த வேண்டியதுல்லே”

“எனக்கு டைஜஸ்ட்டாக மாட்டேங்குதுடா”

“இப்பவும் நம்ம நாட்டுலே பின் தங்குன மக்கள் கிட்டே அறுத்துக் கட்டுகிற (விவகாரத்து மறுமணம்) பழக்கம் இருக்கா... இல்லியா?

“இருக்கு”

“பெரிய ஹை-சொஸைட்டிலேயும் டைவர்ஸும், விதவை வேற கல்யாணம் பண்ணிக்குறதும் சாதாரணமாக நடக்குதா, இல்லியா?

“நடக்கு”

“அப்புறம்... நாம மட்டும் ஏண்டா மாற்றமில்லாம பிற்போக்குத்தனமாக இருக்கணும்? அது அசட்டுத்தனம் இல்லியா?”

“நம்மகிட்டே தானே ஜாதி ரொம்ப வலுவா வேர் விட்டுருக்கு... ஜாதியைத் தாண்டி நம்மாலே எதுவும் செய்ய முடியலியே...”

“ஜாதி... மதம்... தர்மம் எதுவா வேணுமினாலும் இருக்கட்டும்டா... அதெல்லாம் மனுசங்க வளர்ச்சிக்குப் பயன்பட்டாத்தான் அதுக்கு மதிப்பு. மனுச வளர்ச்சிக்குத் தடையாயிட்டா அது விலங்கு. அதை ஒடைச்சிரணும். நம்ம நட்பு. ஜாதியைப் பொருட்படுத்தியிருக்கா...? அப்படித்தான்.

“ம்... அப்படீங்குறே?”

“டேய்... ஒருத்தனுக்குத் தலையெழுத்து சரியில்லாம சின்ன வயசுலே போய்ச் சேர்ந்தா அதுக்காக இன்னொரு சின்னப் பொண்ணோட ஆயுசு பூராவையும் சூன்யமும் கொடுமையுமாகத் தண்டிக்குறது என்னடா தர்மம்? இதைவிட மோசமான பாவம் வேற ஒண்ணும் உண்டா?”

“ஆனா... நீ பெரிய துணிச்சல்காரன் தாண்டா...”

“ஒரு இழவுமில்லே... இதுலே என்னடா துணிச்சல் இருக்கு? கற்புங்குறது உடல் சம்பந்தப்பட்டதுல்லே... மனம், குணம் சம்பந்தப்பட்டதுதான்னு புரிஞ்சுக்கிட்டா இது ரொம்பச் சாதாரணமான காரியம் தாண்டா”[7]

இக்கதையின் மூலம் சாதி மதம் என எதையும் பார்க்காமல் இருக்கின்ற நட்பையும், விதவை மறுமணம் என்பதனை மேலாண்மை பொன்னுசாமி ‘ஜுரணம்’ என்ற கதையின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

## சகுணம் பார்த்தல்

சகுணம் பார்த்தல் என்பது எல்லோர்க்கும் தெரிந்ததுதான். பல்லி சத்தம் போடுதல், தும்பினால், பூனை குறுக்கே வருதல், விதவை பெண்கள் பார்த்தல் என சகுணம் பார்த்தல் உண்டு. அதிலும் விதவை பெண்கள் வந்துவிட்டால் போது வெளியில் செல்கின்ற நிகழ்ச்சி நடைபெறாது மற்றும் எந்த வயதுடையவராக இருந்தாலும் சரி அவர்களை பார்த்து புலம்புவதாக இருக்கும். எனவே அவளும் பெண்தானே கணவன் இறந்ததுக்கு அவர்கள் என்ன பன்னவார்கள். இதனை,

“வெறுங்கழுதை மூதேவி மூஞ்சியைக் காட்டிக்கிட்டு வீதியிலே வரனுமாக்கும், விடியக்காலையிலே! ச்சே... இவா... மொகரையிலே முழிச்சா... வெளங்குன மாதிரித்தான். இன்னிக்குப் பொழுது பூராவும் அமங்கலம்தான்”[8] என்று விதவை பெண்கள் அவர்களின் வேலைக்கு செல்லும் வழியில் நாம் தான் வந்து விட்டோம் என்று நினைக்காமல், அவர்களை பெண்ணாக மதித்தால் போது என்று ‘ஞாபகம்’ என்று கதையிலும் மற்றொரு சிறுகதையில் “நாலு பெண்கள், நல்ல பூப்போட்ட கலர்ச்சேலை உடுத்தி... சீவிச் சிங்காரித்து... பொட்டு வைத்து... ‘பளிச்’ சென்று வந்தார்கள். வீடு வீடாகச் சொல்லி அழைக்கிறார்கள். நிச்சயதார்த்த விழாவுக்கு வரும்படியான ஊர் அழைப்பு.”

பக்கத்து வீட்டில் ‘தப தப’ வென்று நுழைகின்றனர். வீட்டுக்காரர்கள் தடபுடலாக உபசரிக்கின்றனர்.

“எத்தே... எத்தே...”

“யாரடியம்மா? அடடே வாங்க வாங்க”

“எங்க வீட்லே தங்கச்சிக்கு நிச்சயம் பண்ணப் போறோம் வந்துருங்க”

அந்த வீட்டைவிட்டு வெளியேறி வருகிற அந்தப் பெண்கள் இந்த வீட்டை நெருங்குகின்றனர். வீட்டு முற்றத்தில் நடக்கின்றனர்.

ஆவல் வெளிச்சம் கண்ணில் மின்ன அவர்களையே பார்க்கிற ராமசாமி. அம்மா சேலையைப் பற்றியிருந்த அவனது உள்ளங்கையின் மெல்லிய நடுக்கத்தில் உணர முடிகிற அவனது மனசு, முற்றத்தில் நடக்கிற அந்தப் பெண்கள். நிமிர்ந்து கழுதைத் திரும்பி இவளைப் பார்க்கின்றனர்.

ஏறிட்ணுடுப் பார்க்கிற பார்வையில் தெரிகிற அம்மா, தர்மசங்கடமான புன்முறுவலோடு கடந்து போகிற அவர்கள் அசட்டு முறுவல்.

மங்களகரமான வீட்டுக்கு அமங்கலியை எப்படி அழைப்பார்கள்?

'வா' என்று அழைக்கவில்லை. அடிமனசில் சப்பென்று அறைகிற ஏமாற்றம். கடந்துபோகிற அவர்கள் எதையோ பறித்துக்கொண்டு போகிற மாதிரியோர் வேதனை"9

நல்ல நிகழ்ச்சிகளுக்கு அழைக்கவில்லையேன்றாலும் பரவாயில்லை. ஆனால் அவர்களின் பார்வையில் கணவனை இழந்த பெண்களின் நிலை என்னபாடுபடும் என்பதை கொஞ்சம் கூட யோசிக்கவில்லை. விதவை பெண்களின் நிலை அதிகமான இன்னல்களில் அவர்கள் கிடக்கின்றனர். நல்ல நிகழ்ச்சிகளிலும், விழாக்களிலும் அவர்கள் மகிழ்ச்சியோடு இல்லாமல் கணவனை நினைத்து வருத்தத்தல் ஆழ்ந்துள்ளார்கள். எனவே சாஸ்திரம் சம்பர்தாயம் எனப் பார்த்து அவர்களின் மனதை நோகும்படியான வார்த்தைகளை பேசுபவர்கள் என பல பேர் இன்னும் இருந்துக்கிட்டேதான் இருக்கின்றனர் என்பதை 'அண்டாது' என்ற சிறுகதையில் காணலாம்.

## முடிவுரை

மேலாண்மை பொன்னசாமி சிறுகதைகளில் கைம்பெண்களின் நிலைகளை பார்த்து சரியான முறையில் பொதுமக்களுக்கு பல செய்திகளை புகுத்தியுள்ளார். சூழ்நிலை காரணமாக கணவனை இழந்த பெண்கள் அவர்களின் வாழ்க்கையை தன்னுடைய குழந்தைகளுக்காக தான் வாழ்கின்றார் என்பதையும், கைம்பெண்களை பார்த்து கெட்ட சகுணம் என்று நினைக்காமல் நம்முடைய மனமானது சரியான என்னத்தில் பார்க்க வேண்டு என்பதையும் பல சிறுகதைகளில் பார்த்துள்ளோம். இதன் மூலம் விதவை பெண்ணாக பார்க்காமல் பெண்ணாக மதித்தால் போது என்பதை இக்கட்டுரையில் அறியலாம்.

## References

Melaanmai Ponnusami, (2002) Sipikal, Kangai Book Shop, Chennai, India

Melaanmai Ponnusami, (2004) Minsarappoo, Kangai Book Shop, Chennai, India

Melaanmai Ponnusami, (2010) Kaagitham, Thiruvarasu Putthaga Nilayam, Chennai, India

T.V. Kalyana Sundaram, (1934) Penin Perumai allathu Valkai thunai, C.J. Dasan, Park Town, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License